


# மாதுபோஷக ஜாதகக் கதை

முன்னொரு காலத்தில் இமயமலையில் இருந்த ஒரு காட்டிலே வெள்ளை நிறக் கொம்பன் யானையொன்று வசித்து வந்தது. அது தன் தாயாருக்குத் தேவையான சகல பணிகளையும் பாசத்துடன் செய்து வந்தது. ஒரு நாள் வழி தவறிய வேடன் ஒருவனுக்கு அந்த யானை உதவி செய்தது. அதன் உதவியால் அவன் பாதையை அறிந்து தனது ஊருக்குச் சென்றான்.

அக்காலப்பகுதியில் அந்நாட்டு அரசனின் யானை இறந்தது. அதனால் அந்த அரசன் மற்றுமொரு யானையைத் தேடினான். அச்சமயம் திசைமாறிய வேடன் மூலம் அந்த அரசன் கொம்பன் யானையைப் பற்றி அறிந்து கொண்டான். அவ்வேடனின் உதவியுடன் அந்த யானையைப் பெற்றுக் கொண்டான். பின்னர் அரசன் அந்த கொம்பன் யானையை அன்பாக வளர்த்து வந்தான். அதற்கு சுவையான உணவுகளை வழங்கினான். ஆனால் கொம்பன் யானை அவ்வுணவுகளை உண்ணாமல் பசியுடன் இருந்தது.





''நீ ஏன் பசியில் இருக்கிறாய்?'' மன்னன் கேட்டான்.

''கண் தெரியாத எனது தாயார் நான் இல்லாமல் பட்டினியில் தவிப்பார். அதனால் எனக்கு இந்த உணவில் பயனில்லை'' கொம்பன் யானை கூறியது.

அரசன் உடனே அந்த யானையை விடுதலை செய்தான். கொம்பன் யானை தனது தயாருடன் சேர்ந்து வாழத் தேவையான சகல செல்வங்களையும் வழங்கினான்.

இதன் காரணமாக அந்நாட்டு மக்கள் அந்த ஊரை ''அஸ்தினாபுரம்'' என்று அழைக்கத் தொடங்கினர். பாளி மொழியில் 'அஸ்தி' என்பது யானையைக் குறிக்கும்.

## அரும்பதங்கள்
## වදන් පෙළ

1. அஸ்தி - ඇතා
2. பற்றி - ගැන
3. கண் தெரியாத - ඇස් නොපෙනෙන
4. கொம்பன் யானை - දළ ඇතා
5. கண்டுபிடித்து (கண்டுபிடி) - සොයාගෙන
6. சகல - සියලු
7. தேவையான (தேவை) - අවශ්‍ය
8. பட்டினியில் (பட்டினி) - කුසගින්නේ
9. பாசத்துடன் (பாசம்) - සෙනෙහසින්
10. வெள்ளை - සුදු
11. வேடன் - වැද්දා
12. அழைக்கின்றனர் (அழை) - හඳුන්වයි
13. அறிந்தான் (அறி) - දැනගත්තේය
14. உதவி செய்தது (உதவி செய்) - උදව් කළේය
15. பெற்றுக்கொண்டான் (பெற்றுக்கொள்) - ලබා ගත්තේය
16. வசித்தது (வசி) - ජීවත් විය

*17. விடுதலை செய்தான்* - නිදහස් කළේය
*(விடுதலை செய்)*
*18. வழங்கினான் (வழங்கு)* - ලබා දුන්නේය
*19. செல்வங்கள்* - සම්පත්
*20. தாய்* - මව



**செயற்பாடு - 1**
ක්‍රියාකාරකම - 1

**விடை எழுதுவோம்.**
පිළිතුරු ලියන්න.

1. *கொம்பன் யானை எங்கே வசித்தது?*

______________________________

2. *பாதை தவறியவன் யார்?*

______________________________

3. *யானை யாருக்கு உதவி செய்தது?*

______________________________

4. *யானை ஏன் உணவு உண்ணாமல் இருந்தது?*

______________________________

5. *இறுதியில் அரசன் யானைக்கு என்ன செய்தான்?*

______________________________

6. *பிற்காலத்தில் அந்த ஊர் ஏன் 'அஸ்தினாபுரம்' என்று அழைக்கப்பட்டது?*

______________________________

.නොමිලේ බෙදාහැරීම සඳහා ය



## செயற்பாடு - 2
## ක්‍රියාකාරකම - 2

**எழுத்துப் பிழை அற்ற சொல்லைத் தெரிவு செய்வோம்.**
නිවැරදි අකුරු යෙදී ඇති පදය තෝරමු.

உனவு/ உணவு

யாணை/ யானை

தவரி / தவறி

வெல்ளை / வெள்ளை

ஆநால்/ ஆனால்

இன்ரும்/ இன்றும்

சேர்ந்து/ சேற்ந்து

நிறம்/ நிரம்



## செயற்பாடு - 3
## ක්‍රියාකාරකම - 3

**உதாரணத்தை அவதானித்து வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வோம்.**
උදාහරණය අවධානයට ගෙන හිස්තැන් පුරවමු.

அவன் பெற்றுக்கொண்டான்

_____________________ பெற்றுக் கொண்டார்.

_____________________ பெற்றுக் கொண்டாள்.

_____________________ பெற்றுக் கொண்டார்கள்.

____________________ பெற்றுக் கொண்டேன்.

____________________ பெற்றுக் கொண்டாய்



## செயற்பாடு - 4
## ක්‍රියාකාරකම - 4

**பின்வருவனவற்றிற்கு பொருத்தமான இறந்தகால வினைச்சொல்லை இனங்கண்டு இடைவெளிகளை நிரப்புவோம்.**

**පහත සඳහන් වචන හා සම්බන්ධ අතීත කාල ක්‍රියාපද යොදා හිස්තැන් සම්පූර්ණ කරමු.**

1. *பாசத்துடன்* ____________________
2. *பட்டினியில்* ____________________
3. *கண்டுபிடித்து* ____________________
4. *வசித்து* ____________________
5. *பாதை தவறி* ____________________



## செயற்பாடு - 5
## ක්‍රියාකාරකම - 5

**கீழ்வரும் சொற்களுக்கு ஒத்தகருத்துச் சொற்களை எழுதுவோம்.**

**පහත සඳහන් වචනවල සමාන පද ලියමු.**

1. *அரசன்* ____________________
2. *யானை* ____________________

3. பாதை ____________________

4. தாய் ____________________

5. ஊர் ____________________

6. கண் ____________________

7. அரசன் ____________________

8. உணவு ____________________



## செயற்பாடு - 6
## ක්‍රියාකාරකම - 6

**பாடத்திற்கு எற்ப யானைக்கும் வழிதவறிய வேடனுக்கும் இடையில் இடம்பெற்ற உரையாடலை எழுதுவோம்.**

කතාව ඇසුරු කොට හස්තියා හා වැද්දා අතර ඇති වූ දෙබස සකස් කර ලියමු.



## செயற்பாடு - 7
## ක්‍රියාකාරකම - 7

**தாயாருக்கு உதவி செய்த சம்பவம் தொடர்பான கதையொன்றை எழுது வோம்.**

මවට උදවු උපකාර කළ සිද්ධියක් ඇසුරෙන් කතාවක් ලියමු.